மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) திரு. சி. கண்ணன் (7991) என்ற ஒரு கைதி மட்டும் விண்ணப்பித்தார்.

(இ) 1976-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்.

(உ) காலம் சென்ற திரு. சின்னசாமியின் இரண்டாம் மனைவிக்கும் அவருடைய மகனுக்கும் ரூ. 5,000 வழங்கப்பட்டது. மற்றொரு பாதி தொகையான ரூ. 5,000 அவருடைய மைனர் குழந்தைகள் சார்பில் வங்கியில் வைக்கப்பட்டுள்ளது.

வினா எண் 174—

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மேலும் சில விவரங்களை வினா எண் 174 குறித்து சேகரிக்க வேண்டியதாக இருப்பதால், இந்த வினா தள்ளி வைக்கப்படுகிறது.

Cement Factory near Thiruvadavur

*175. Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) whether it is a fact that a private entrepreneur has been issued with a permit, to start a Cement Factory near Thiruvadavur in Melur Taluk, Madurai District;

(*b*) if so, whether it is also a fact that, the owners of the fertile wet lands around the factory site. have objected to the setting up of the Cement Factory, on the ground that the dust and smoke from the said Factory, would harmfully affect their yield; and

(*c*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : (அ) சிறிய சிமெண்ட் ஆலை அமைக்க தொழில் உரிமம் எதும் தேவையில்லை. நிறுவனம், டைரக்டர் ஜெனரல் ஆப் டெக்னிகல் டெவலப்மெண்டில் பதிவு செய்தாலே போதுமானது. மேலூர் சிமெண்ட் நிறுவனம் டைரக்டர் ஜெனால் ஆப் டெக்னிகல் டெவலப் மெண்டில் பதிவு செய்துள்ளது.

(இ) ஆம்.

(உ) திருவாதவூர் விவசாயிகளும், பொது மக்களும் சிறு சிமெண்ட் ஆலை அமைப்பதால் தூசி பறந்து ஆலையைச் சுற்றியுள்ள நீர்நிலைகள், நிலங்கள் பயிர் செய்ய ஒவ்வாமல் போய் கட்டாந்தரையாகிவிடும் நிலை

ஏற்படும் என்றும், ஆடுமாடுகள் பாதிக்கப்படும் என்றும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தியுள்ளார்கள். இவ்வரசால் இந்திய விவசாய ஆராய்ச்சி நிறுவனத்திற்கு மேற்படி சிறு சிமெண்ட் ஆலை, திருவாதவூரில் அமைப்பதால் விவசாயிகளின் பயம் குறித்து ஆய்வு செய்யுமாறு கேட்கப்பட்டது. மத்திய அரசும் இதற்கிணங்க வல்லுநர் குழுமூலம் ஆய்வுசெய்து மேற்படி சிறிய சிமெண்ட் ஆலை அமைப்பதால் சுற்றுப்புறமும், நில நீர்நிலைகளும் மக்களுக்கு சுகாதாரக் கேடு விளைவிப்பதற்கு நியாயமான காரணங்கள் உண்டு என்று கூறியுள்ளது. எனவே, சிறிய சிமெண்ட் தொழிற்சாலை வேறு இடத்தில் மாற்றி வைக்கும்படி பரிந்துரை செய்துள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, மதுரைக்கு அடுத்து, பக்கத்தில் சிறிய சிமெண்ட் தொழிற்சாலை தொடங்குவதற்கு முன்னால், அந்த வட்டாரத்திலுள்ள மக்கள் தங்களுக்குத் தொழிற்சாலை வரும் என்று இருக்கிறார்கள். அரசு நடவடிக்கை எடுத்து, மத்திய அரசுக் குழு சென்று பார்த்து, அது மாற்று இடத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. தாழையூத்தில் சிமெண்ட் ஆலை ஒன்று இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய, 5, 6 மைல்கள் சுற்றிலும் இருக்கக்கூடிய மக்களுக்கு பாதிப்பாக இருக்கிறது. இடையூறாகத்தான் இருக்கின்றது. சுகாதாரம் கெடுகிறது. அங்கேயுள்ள பனை மரங்கள், வீடுகள் இவைகளில் எல்லாம் அந்த சிமெண்ட் தூள் படிந்திருக்கிறது. அதைப்பற்றி அரசு பரிசீலிக்கிறதா ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற தொழிற்சாலை ஏற்கெனவே மதுரையிலே தொடங்கப்பட்டு பல ஆண்டுகளாக நடந்து வருகிறது. இப்போது கேள்வி கேட்பது புதிதாக மதுரையில் ஆரம்பிக்கப்பட இருக்கிற தொழிற்சாலைபற்றி. ஆரம்பிப்பதற்கு முன்னாலே 'அப்ஜக்ஷன்' வந்திருப்பதால், அந்த இடத்திற்குப் பதிலாக ஒரு 'ஆல்டர்னேடிவ் சைட்' ஐத் தேர்ந்தெடுக்கும்படி சொல்லியிருக்கிறார்கள். அந்த நிறுவனத்தினர் விண்ணப்பித்திருப்பதன் பேரில் சொல்லியிருக்கிறார்கள். அது பற்றி விசாரணையில் இருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இப்போது கூறப்பட்டது போன்று சங்கடங்கள் இருந்தாலும், தொழில் வளர்ச்சியின் அவசியத்தைப் பற்றி நாம் உணர்கிறோம். எனவே இதையெல்லாம் தவிர்க்கின்ற வகையிலே, இந்த 'என்வைரன்மெண்டல் பொலூஷன் கன்ட்ரோல் போர்டு' (Environmental Pollution Control Board) என்ன சிபாரிசு செய்திருக்கிறது? அந்தச் சிபாரிசுகள் அமுல் நடத்தப்படுகின்றனவா ? அந்த

போர்டு இந்தமாதிரி பொலூஷனைத் தவிர்ப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று அரசுக்குச் சொல்லியிருக்கிறது? அதைப்பற்றி அரசு பரிசிலித்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : இவற்றைப் பரிசீலிப்பதற்காகத்தான் மத்திய அரசு ஒரு வல்லுநர் குழுவை அமைத்திருக்கிறது. இந்த வல்லுநர் குழு இதைப்பற்றி ஆய்வு செய்திருக்கிறது. அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கின்ற பயம் நியாயமான பயம் தான் என்று தெரிவித்திருக்கிறது. அதனுடைய அடிப்படையிலேதான் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்த இடத்திற்குப் பதிலாக இன்னொரு இடத்திற்கு மாற்றி அங்கு ஏன் ஆரம்பிக்கக்கூடாது என்று அவர்களே கேட்டிருக்கிறார்கள். அவர்கள் ஏதாவது 'ஆல்டர்னேடிவ்' இடம் சொன்னால், அங்கு ஆரம்பிப்பதற்கு அரசு வேண்டிய உதவிகளைச் செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Salem Magnesite

* 176 *Q.*—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) the date on which the licence issued for the Company engaged in mining operations of Magnesite in Salem, expired;

(*b*) the number of times when the Company sought for extension of the licence period; and

(*c*) the stage at which the matter now stands?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : (அ) திருவாளர்கள் சேலம் மாக்னசைட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 3—12—1957-லிருந்து 20 ஆண்டுகளுக்கு நீடித்து கொடுக்கப்பட்ட சுரங்கக் குத்தகை 2—12—1977 ஆம் தேதியுடன் முடிவடைந்தது.

(இ) இந்தக் குத்தகையை மேலும் 20 ஆண்டுகளுக்கு, அதாவது 3—12—1997 வரை நீடிக்கக்கோரி, இந்த நிறுவனம் 3—12—1976 அன்று ஒரு விண்ணப்பம் கொடுத்தது.

(உ) இந்த இடத்தில் அரசே கனிப்பொருள் தோண்ட வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டதால், இந்த நிறுவனத்தின் சுரங்கக்குத்தகை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. அரசின் சார்பில் "ரெய்சிங் காண்டிராக்டர்" என்ற